


தஞ்சை வடக்கு மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், தொகுதி பார்வையாளர்கள் பி.எம்.ஆனந்த், கே.மறைமலை, ந.செந்தில், மாவட்டக் கழக நிர்வாகிகள் க.நசீர்முகமது, கோவி.அய்யாராசு, எஸ்.துரைமுருகன், ந.ஜெயலட்சுமி, சாஸ்தா நடராஜன், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணியில் முழுமையாக ஈடுபடுவீர்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பூர், அக். 21 -

திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக அலுவலக முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்ட செயற்குழுக் கூட்டம் 15.10.2024 செவ்வாய்க் கிழமை அன்று மாவட்ட அவைத் தலைவர் க.நடராசன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் கருத்துக்களை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் மாநகர கழக செயலாளர்கள் டி.கே.டி.மு.நாகராசன் திருப்பூர் தெற்கு, மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் திருப்பூர் வடக்கு உள்பட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், கழக துணை அமைப்புக்களின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் வியந்து பார்க்கும் அளவுக்கு "திராவிட மாடல்" ஆட்சியை வழங்கி வருகிறார் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இப்பயன்மிகு ஆட்சிக்கு திறன்மிகு துணை முதலமைச்சராக, கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நியமித்திருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல் என்கிறார் வள்ளுவர்.

இந்தச் செயலை, இன்ன காரணத்தால் யார் செய்து முடிப்பார் என்பதை ஆராய்ந்து, அந்தச்செயலை அவரிடமே வழங்குமாறு கட்டளையிட்டுச் சொல்கிறது வள்ளுவ அறம். அத்தகைய அறக்கடமையின் பாற்பட்டதாக இருக்கிறது முதலமைச்சரின் தேர்வு!

விளையாட்டுத் துறையில் உலக மைதானமாக தமிழ்நாடு உயர்ந்துள்ளது. இளைஞர்களின் மேம்பாடும் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. பள்ளிக் குழந்தைகளோடு காலையில் அமர்ந்து உண்ணும் உணவு, அந்த பிள்ளைச் செல்வங்களுக்கு ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது. முதலமைச்சர் உருவாக்கிய சிறப்புத் திட்டங்களை மிகச் சிறந்த திட்டங்களாக தனது கண்காணிப்பில் வளர்த்து வருகிறார் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

கட்சி ஆட்சி ஆகிய இரண்டுக்கும் தூணாக விளங்குபவருக்கு துணை முதலமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டிருப்பது காலத்தின் கடமையே! அக்கடமையை திறம்படச் செயல்படுத்துவது அவரது திறமையே! இத்திறமை மூலமாக தமிழ்நாடு அடைவது பெருமையே! தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை இக் கூட்டம் நெஞ்சார வாழ்த்துகிறது!

கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதலமைச்சராக நியமித்த கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக் கூட்டம் நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. நம் திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப் பட்டுள்ளது. இதுதவிர தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது. அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரி பார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 01.01.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத் தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6ம், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7ம், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id card) படிவம் 8ம், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்கப் படிவம் 6 பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக்கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம் - 6 ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்6ன் காலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப் படுகிறது

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024

2. பெயர்களைச் சேர்க்க/நீக்க/ திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை.

3. சிறப்பு முகாம் நடைபெறும் நாட்கள் நவம்பர் 09 மற்றும் 10 தேதிகள் நவம்பர் 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது

4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், நம் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, நகர,பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அணிகளின் பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மண்டல குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது. மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது.

வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), இந்தப் பணியினை முழுமையாக ஈடுபட்டு 2026 சட்டமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOக்களுடன் உடனிருந்து கண்காணிக்க வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க என்ற பெயரில் இந்தியன் வங்கியில் (INDIAN BANK) திருப்பூர் கிளையில் (TIRUPUR BRANCH) கணக்கு துவங்குவதெனவும் இந்தக் கணக்கை மாவட்டக் கழகச் செயலாளர் இயக்குவதெனவும் தீர்மானிக்க ப்பட்டது. அதே நேரத்தில் மாவட்டக் கழகத்தின் செயலாளர் மாற்றப்பட்டால் அதனை தக்க ஆதாரத்தோடு, அவ்வப்போது வங்கிக்கு தெரிவிப்பது எனவும் கூட்டம் தீர்மானிக்கிறது.



கழக மகளிர் அணியின் உறுப்பினர் சேர்க்கை முகாமினை கோவை வடக்கு மாவட்டம் பெரிய நாயக்கன் பாளையம் கிழக்கு ஒன்றியத்தில் கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ.அ.ரவி துவக்கி வைத்தார். இதில் ஒன்றிய கழக செயலாளர் கார்த்திக், மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் உமா மகேஸ்வரி, கோவை வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ரதி மனோகர், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ரங்கநாயகி , தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.பி.சுப்பிரமணியன், மாவட்ட துணை செயலாளர் அசோக் பாபு ஆருகுட்டி மற்றும் கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலை நகர இளைஞர் அணி சார்பில் 33 வார்டுகளிலும் இளைஞர் அணி புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டினை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் தலைமையில், நகர கழக செயலாளர் சி.வேலுச்சாமி வழங்கினார். இதில் பொதுக்குழு உறுப்பினர் யூ.என்.பி.குமார், நகர அவைத்தலைவர் சொர்க்கம் பழனிச்சாமி, துணை செயலாளர்கள் வழக்கறிஞர் எஸ்.செந்தில்குமார், கே.ரேணுகா, நகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.விக்ரம், துணை அமைப்பாளர்கள் இந்தியன் விஜய், நரேஷ்குமார், செல்வகுமார், அசார், அர்ஜுனன், பாலசுப்பிரமணியம் உள்பட மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில், மாவட்ட செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் க.நடராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் சிறப்புரையாற்றினார். இதில் மாநகரச் செயலாளர்கள் டி.கே.டி. மு.நாகராசன் திருப்பூர் தெற்கு, மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், திருப்பூர் வடக்கு, உள்பட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## என்.கோவிந்தராஜன் தலைமை!

# திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!

திருச்சி, அக். 21 -

திருச்சி தெற்கு மாவட்டச் செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் வகித்து சிறப்புரை யாற்றினார்.

இக்கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் என். கோவிந்தராஜன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 1. திருச்சி கிழக்கு தொகுதி பார்வையாளர் தஞ்சை தெற்கு மாவட்ட அமைப்பாளர் தொண்டரணி அமைப்பாளர் கதிரவன் திருவெறும்பூர் தொகுதி தா.மணிராஜன் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மணப்பாறை தொகுதி பார்வையாளர் டாக்டர் ஆர் அண்ணாமலை மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் ஆகியோர் அமைச்சரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன தீர்மானத்தை ஒட்டி அமைச்சர் தனது உரையை நிகழ்த்தினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

கழக இளைஞர் அணி செயலாளரும் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமாகிய மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை கழக தொண்டர்களின் வேண்டுகோளை ஏற்று தமிழ்நாடு துணை முதலமைச்சராக பணியாற்ற வாய்ப்பளித்த கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இச்செயற்குழு கூட்டம் தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

09.11.2024, 10.11.2024 23.11.2024, 24.11.2024 ஆகிய நான்கு தினங்களும் நடைபெற உள்ள வாக்காளர் சிறப்பு திருத்த முகாமில் பாக முகவர்கள் அனைவரும் அவரவர்க்கு ஒதுக்கப்பட்ட பாகங்களில் முகாமில் கலந்து கொண்டு இல்லம்தோரும் சென்று புதிய வாக்காளர்களை சேர்த்து 2026 ல் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் கழக தலைவர் அவர்கள் அறிவுறுத்திய 200 இடங்களில் வெற்றி என்ற இலக்கை பெற கடுமையாக உழைத்திட இக்கூட்டம் வலியுறுத்திகிறது.

தலைமை கழகம் அறிவுறுத்தலின்படி, கழக வளர்ச்சிக்காக தலைமை கழகத்தால் வழங்கபட உள்ள இரசீது புத்தகத்தின் மூலம் திருச்சி தெற்கு மாவட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்ட கிளை, வார்டு, வட்டம், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் நிதி வசூல் செய்து அத்தொகையை மாவட்ட கழக செயலாளர் மற்றும் மாவட்ட பொருளாளர் ஆகிய இருவரும் இணைந்து வங்கி கணக்கு துவங்குவது எனவும், வசூலாகும் தொகையை அந்த வங்கி கணக்கில் செலுத்திய பின்னர், ஒரு குறிப்பிட்ட தொகை சேர்ந்ததும் அத்தொகையினை மாவட்ட கழக செயலளார் மற்றும் மாவட்ட பொருளாளர் இருவரும் இணைந்து தலைமை கழக வங்கி கணக்கிற்கு அனுப்பி வைப்பார்கள் என ஒருமனதாக தீர்மானம் நிறை வேற்றப் படுகிறது.

நாளது 01.09.2024 அன்று திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக திருச்சி சிந்தாமணி தேசிய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது பொது உறுப்பினர் கூட்டத்தை மாவட்ட மாநாடு போல் சிறப்புற நடத்தி நமது கழக தலைவர் அவர்களின் நன்மதிப்பையும், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கழக முதன்மை செயலாளர் மாண்புமிகு.கே.என்.நேரு அவர்களின் பாராட்டையும் பெற்ற நமது மாவட்ட கழக செயலாளர், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது. மாவட்ட பொது உறுப்பினர் கூட்டத்தினை தொடர்ந்து நமது தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளிலும் பொது உறுப்பினர் கூட்டத்தை சிறப்புற நடத்திய செயலாளர்கள் அனைவருக்கும் இக்கூட்டம் நெஞ்சார்ந்த பாராட்டை தெரிவித்துக்கொள்கிறது.

இரங்கல் தீர்மானம்

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கி மறைந்த மாண்புமிகு.முரசொலிமாறன் அவர்களின் சகோதரரும் தலைவர் கலைஞர் அவர்களின் மருமகனும், கழக நாளேடான "முரசொலி" இதழின் ஆசிரியராகவும், கழக தொண்டர்களின் நன்மதிப்பையும் பெற்ற திரு "முரசொலி" செல்வம் அவர்களின் மறைவிற்கு இச்செயற்குழு கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

மேலும் இந்த கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் பேசியதாவது வருகின்ற ஒன்பது பத்து ஆகிய இரண்டு நாட்களில் வாக்காளர் பெயர் சேர்த்தல் மற்றும் நீக்குதல் ஆகிய பணிகளை நாம் சிறப்பாக செய்திட வேண்டும் என்றும் அன்றைய தினம் நான் சில பகுதிகளில் ஆய்வை மேற்கொண்டு பிறகு என்னை மாவட்ட பொறுப்பாளராக நாகப்பட்டினம் மாவட்டத்தில் நியமித்துள்ளதால் நான் அங்கு பணிகளை கவனிக்க வேண்டும் என்றும் ஆகவே நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த இரண்டு நாட்களில் நமது கழகத்திற்கு வலு சேர்க்கும் வண்ணம் இந்த பணியை பாக முகவர்கள் மூலம் ஒவ்வொரு பாகங்களிலும் சிறப்பாக நடத்தி முடிக்க வேண்டும் என்றும் மேலும் கடந்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்காக மே மாதம் கூட்டம் நடத்தி நாடாளுமன்ற தேர்தலிலும் நாம் வெற்றி பெற்றோம் அதே போல் வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலும் நாம் சிறப்பாக செயல்பட்டு 184 தொகுதிகளை விட தமிழக முதல்வர் அவர்கள் கூறியது போல் இருநூறு தொகுதிகளை நாம் வென்றெடுக்க வேண்டும் என்றும் அதற்கு நமது உழைப்பு கடினமாக இருக்க வேண்டும் என்றும் எந்த மாவட்டத்திலும் இல்லாதது போல் திருச்சி தெற்கு மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுவதாக தமிழக முதல்வர் கூறியதை நாம் நிரூபிக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

மேலும் செயற்குழு கூட்டத்திற்கு வந்த அனைவருக்கும் நன்றி கூறினார்

கூட்டத்தில் கிழக்கு மாநகரச் செயலாளர் மு.மதிவாணன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சேகரன், சபியுல்லா பகுதி கழகச் செயலாளர் மோகன் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, மற்றும் பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் சேர்மன்கள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்ட திருக்குவளைக்கு உயர்கல்வித்துறை அமைச்சராக புதிதாக பொறுப்பு ஏற்றுள்ள கோவி.செழியன் வருகை தந்து கலைஞர் பிறந்த இல்லத்தில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செ.இராமலிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், க.இராஜேந்திரன், க.மறைமலை, மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர்மணிவண்ணன், ஒன்றியக் கழக செயலாளர்கள் ஆர்.தாமஸ்ஆல்வாஎடிசன், சோ.பா.மலர்வண்ணன், மா.குமார், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், கோசி.குமார், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ் மற்றும் பலர் உள்ளனர்.



இராசிபுரம் ஒன்றியம், கனகபொம்மன்பட்டி அ.தி.மு.க. ஊராட்சி மன்ற தலைவர் பி.முத்துலட்சுமி சிவக்குமார் மற்றும் முன்னாள் ஊராட்சி செயலாளர் சிவக்குமார் ஆகியோர் தலைமையில் 20 பேர் அக்கட்சியிலிருந்து விலகி நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் , நாமக்கல் மாவட்ட கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் முன்னிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் இராசிபுரம் ஒன்றிய கழக செயலாளரும் ஒன்றியக் குழு தலைவருமான கே.பி.ஜெகநாதன், ஒன்றிய பொருளாளர் ரவி, சிங்களாந்தபுரம் ஊராட்சி தி.மு.க. செயலாளர் முருகேசன், பன்னீர்செல்வம், உதயசூரியன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.